1968 ஆகஸ்ட் 21]

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அப்படி ஏதேனும் ஆரம்பிக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏராளமாக சோப் உற்பத்தியாகும் காரணத்தால், சோப் தொழிற்சாலை, 'பான்டு லிஸ்ட்' டில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குப் புதிதாக லைசென்ஸோ, மற்றவையோ தரும் நிலை இல்லை. ஆகவே, சோப் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடிய நிலை இல்லை என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. மா. பா. சாரதி : மணிலாப் பயிர் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய வடார்க்காடு மாவட்டத்தில், ஏற்கனவே வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு, அது நடத்தப்பட முடியாமல் போய்விட்டதை உத்தேசித்தும், வடார்க்காடு மாவட்டத்தில் நிலக்கடலை அதிகமாக உற்பத்தி ஆவதை உத்தேசித்தும், அந்த மாவட்டத்தில் ஒரு வனஸ்பதித் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பிருந்தது என்ன காரணத்தினால் நடத்தப்பட முடியாமல் போயிற்று என்பதைக் கண்டுபிடித்து, அந்தக் காரணங்களையெல்லாம் நிவர்த்திக்க வாய்ப்பு ஏற்படுமானால், மறுபடியும் அது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட வனஸ்பதித் தொழிற்சாலை எந்த அளவிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலை நடைபெறுகின்ற முறைக்கும் நெய்வேலியில் வனஸ்பதித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, The Madras Vanaspathi factory at Villupuram had been closed down. என்றுதான் விவரம் தரப்பட்டிருக்கிறது. அது மூடப்பட்டதற்கு என்ன காரணங்கள் என்பதைக் கண்டறிந்து, உள்ளபடியே தொழிற்சாலையை நடைபெறச் செய்யவேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கமாகும். அதற்கு ஏதாவது ஆதரவு அளிப்பதற்கோ, அல்லது அதை ஊக்குவிப்பதற்கோ வழிவகை இருந்தால், செய்யலாம். அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், ஆராய்ந்து விவரங்கள் தரலாம்.

Price preference scheme

* 68 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government propose to introduce 'price subsidy scheme' for the manufactured articles purchased by Government Departments from private industries; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அ & இ : தமிழ் நாட்டில் ஏற்கெனவே 'விலைச்சலுகைத் திட்டம்' ஒன்று செயலில் உள்ளது. உறுப்பினர் அத்திட்டத்தைப் பற்றியே குறிப்பிடுகிறாரென நம்புகிறேன். அத்திட்டத்தின் விவரங்கள் அடங்கிய அரசாங்க ஆணையின் நகல் * ஒன்று (தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையில் 1—3—1968-ம் தேதியுள்ள 831-ம் எண் அரசாங்க ஆணை) பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக, இதர மாநிலங்களிலிருந்து வாங்கும் பொருள்களின் விலையைவிட 10 சத விதம் அதிகமான விலையாக இருந்தாலும், நம்முடைய மாநிலத்தினுடைய பொருள்களையே வாங்கவேண்டும் என்று விதி தரப்பட்டிருக்கிறது. "ப்ரொவைடெட் தி க்வாலிடி ஈஸ் கம்பாரபிள்" என்று அந்த விதிக்கு மட்டும் இருக்கிறது. ஆனால், மற்றவைகளிலே அது இல்லை. இப்பொழுது க்வாலிடி சரியில்லை என்று சொல்லிவிட்டு, வேறு மாநிலங்களிலிருந்து சரக்குகளை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, 'ஸேம் மெடீரியல்' என்று போட்டாலே போதும். அந்த வகையில் திருத்தம் செய்வதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எது எப்படியிருந்தாலும், க்வாலிடிதான் மிக மிக முக்கியம், இந்த மாநிலத்தில் வாங்கினாலும், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கினாலும். ஆகவே, அதை விட்டுவிட்டு வாங்குவது என்று வைத்தால், இந்த மாநிலத்தில் உற்பத்தியாவதையெல்லாம் வாங்கவேண்டும் என்று ஒரே உத்தரவு இட வேண்டியிருக்கும், மற்றவற்றை வாங்குவதற்கே முடியாமல் இருக்கும். ஆகவே, க்வாலிடி அடிப்படையில் தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதனால் கொஞ்சம் விலை அதிகமாகலாம். 10 சத விதம் கூடக் கொடுத்து, இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று அத்தகைய சலுகை தரப்பட்டிருக்கிறது. ஒரே விதமான க்வாலிடி இருந்து, நல்ல க்வாலிடியாக இருந்து, ஆனால் விலை இதைவிடக் குறைவாக இருக்கிறது என்றால் அதையும் வாங்கலாம், இதையும் வாங்கலாம். அதற்காகத்தான் 10 சத விதம் கூடத் தரலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தளர்த்திவிட்டால், பிறகு பண்டங்கள் வாங்குவதில் பல குறைபாடுகள் ஏற்படும்.

Landing space for fishing boat in Ovari

*69 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is a proposal to acquire vacant sites in Ovari village in Nanguneri taluk, Tirunelveli district to provide landing spaces for the boats of fishermen of the said village?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

* 516–519-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.